www.padippakam.com


# உதயசூரியன்
UTHAYASURIYAN

விலை ரூபா 1-00

"எண்ணிய முடிதல் வேண்டும்;
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும்."
—மகாகவி பாரதி—

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 15-5-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 33


# விடுதலை உணர்வோடு விளையாட வேண்டாம்!

## சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு யோகேஸ் எச்சரிக்கை!

அடக்குமுறை மூலம் ஒரு இனத்தின் விடுதலை உணர்வை மழுங்கச் செய்ய முடியாது. இப்படியான செயல்களினுல் தமிழ் மக்களை அடக்கியொடுக்கி மண்டியிடச்செய்யலாமென நீங்கள் நினைத்தால் நிச்சயம் தோல்வி காணப் போகிறீர்கள். அதில் ஒரு போதும் உங்களுக்கு வெற்றி கிட்டாது என்பதை கூறிவைக்கவிரும்புகிறேன்.

இவ்வாறு யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள் அண்மையில் சிறீலங்கா பாராளுமன்றத்தில் பேசும் போது சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

'பிரதி பெருந்தெருக்கள் அமைச்சர் பேசுகையில், நாட்டில் கொள்ளைகள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனல் வடக்கில் நடக்கும் கொள்ளை

கள் அரசிய[illegible] டவை என[illegible] டிக் கூறுவத[illegible] அரசியல் பிரச்[illegible] கின்றன என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

பயங்கரவாதிகள், கெரில்லாக்கள் என்று விடுதலை விரும்பிகளை பலபெயர்களில் அழைக்கலாம். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரை அமெரிக்க ஜனுதிபதி றீகன் பயங்கரவாதிகள் என்கிருர். ஆனுல் அரபு மக்களோ அவர்களை விடுதலைப் போராட்ட வீரர்கள் என்கிருர்கள். என்ன பெயர் சொன்னுலும் விடுதலை இயக்கத்தினரை மறைத்துவிட முடியாது.

[illegible] ஆன் செய[illegible] [illegible] சாதாரண மக்கள் துன்புறுத்தப்படுகிருர்கள். இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாகிருர்கள். 'ஜீப்'பில் செல்வதும் என்னையே 'கிழே இ[illegible]' என்று பண்பற்ற முறையில் கூறுகிருர்கள். எனக்கே இந்த நிலையென்ருல் சாதாரண மக்களுக்கு எப்படி இருக்கும்.

### கூட்டணிக்காக சிங்களவர் பிரசாரம்!

அமைச்சர் தேவநாயகத்தின் கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த சிற்ருண்டி என்னும் ஊரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (10-5-81) அன்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சிங்களவர் ஒருவரும் கலந்துகொண்டு, ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கும் யு. என். பியை முறியடிக்க த. வி. கூட்டணியை ஆதரியுங்கள் என்று மக்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

இக் கூட்டத்தின் போது, தேவநாயகத்தின் சர்வாதிகாரப் போக்குக்காரணமாக யு.என். பியில் இருந்து விலகிய பலர் கூட்டணி வேட்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தி அவர்கட்கு மலர்மாலைகள் அணிவித்து தங்கள் வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

### கூட்டணி மீது சிறில்மத்தியு சீற்றம்

வடபகுதிக் கொள்ளைப் பணம் கூட்டணிக்கே வந்து சேருகிறது, சிக்காக்கோ பாணியில் வடபகுதியில் நடைபெறும் கொள்ளைகள் மூலம் கிடைக்கும் பணம் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே அனுபவிக்கின்றனர்.

கொள்ளையில் ஈடுபடுபவர் [illegible] 4 ஆயிரம் சம்பளம் வழங்கப்படுகிறது. தீவிரவாத இளைஞர்களுடன் கூட்டணிக்கு நெருங்கிய தொடர்புண்டு. இவ்வாறு சிங்கள சிறீலங்காவின் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

## வெற்றிவேல் வெற்றிக்காக உழைக்கிருர்!

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களில் பெரும்பான்மையோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபடுவதில் ஈடுபட்டுள்ளனர்.

நிபந்தனை எதுவுமின்றி அரசாங்கக் கட்சியைப் படுதோல்வி அடையச் செய்வதில் கூட்டணியும் சுதந்திரக் கட்சியும் கூட்டாகச் செயல்பட்டு வருகின்றன.

கூட்டணிப் பிரமுகர்கள் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்து தமிழ்மக்களின் அரசியல் நிலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டணியின் வெற்றியின் முக்கியத்துவம் குறித்து விளக்கியுள்ளார்கள்.

கவிஞர் காசி ஆனந்தனுடன் கடந்த பொதுத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட ஓய்வுபெற்ற ஆசிரியரும் தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய கட்சித் தலைவருமான திரு. வெற்றிவேல் விநாயகமூர்த்தியும் த. வி. கூட்டணியின் வெற்றிக்காக முன்னின்று உழைத்து வருகின்ருர்.

## இருபதாம் நூற்ருண்டிலே இப்படியும் ஒரு கிராமம்!

சம்மாந்துறைத் தொகுதியிலே ஒரு தமிழ்க் கிராமம். அதன் பெயர் வீரச்சோலை. அங்கே 90 குடும்பத்தினர் 20- வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். இந்த மக்கள் பல வருடங்களாக ஒதுக்கப்பட்டவர்களாக-புறக்கணிக்கப்பட்டவர்களாக- வாயால் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத பலப்பல சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டு வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிருர்கள்!

இந்த மக்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை- 5 மைல் தூரம்- நடந்தே செல்ல வேண்டியிருக்கிறது- வைத்திய வசதி இல்லை- கடிதப்போக்குவரத்து வசதியில்லை- ஒரு கடிதப் பெட்டியைத்தானும் ஏற்படுத்திக் கொடுக்க- இந்த மக்களின் கண்ணீரைத் துடைக்க- இத்தொகுதி மந்திரி யாருக்குத்தான் மனம் வராவிட்டாலும்- அவரது எடுபிடிகளான தமிழ் கங்காணிகளாவது இவ்விடயத்தை கவனத்துக்கு எடுக்கவில்லையென இக் கிராமத்து மக்கள் மிகுந்த வேதனைப்படுகிருர்கள்-

கடந்த தேர்தலின்போது தும்பிக்கையை நம்பி வாக்களித்தவர்கள் யானைவந்தால் பானை வழியும் என நினைத்தவர்கள் எங்களுக்கே இந்தப் பாகுபாடா என- எண்ணிப் பெருமூச்சு விடுகிருர்கள்-

### தோளோடு தோள் சேர்ந்து!

இன்றைய யு.என். பி அரசு நாட்டு மக்களை வாட்டி வதைக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் ஆக்கபூர்வமான அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. எனவே, எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும் தோளோடு தோள் சேர்ந்து பாடுபட வேண்டுமென முன்னுள் மூதூர் பா. உ. ஜனுப், ஏ. எல். ஏ. மஜீத் ஒரு கருத்தரங்கிற்கு தலைமை வகித்துப் பேசும் போது பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### செங்கொடிச் சங்கமும் ஆதரிக்கின்றது!

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடைபெறவிருக்கும் மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிடும்தமிழர்விடுதலைக் கூட்டணியை, செங்கொடிச் சங்கம் ஆதரிக்குமென அதன் தலைவர் திரு. ஆ. இராமையா தெரிவித்துள்ளார்.

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

படிப்பகம்

www.padippakam.com






சொ. ரவிச்சந்திரன்
320, 3ம் யூனிற்
யோகபுரம்

கே: மேதினத்தைப் பற்றிச் சில வரிகள் கூறுங்கள்.

ப: 1986ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரில் ஒரு நாளைக்கு 24 மணித்தியாலமல்ல-எட்டுமணித்தியாலமே வேலை செய்ய முடியும் என்ற கோரிக்கையை முன் வைத்து தொழிலாளர் ஒரு உரிமைப் போராட்டத்தையே நடத்தினர். இதனைக் கண்டு பொறுத ஆளும் வர்க்கம் அவர்கள் மீது அடக்குமுறையை ஏவியது. அதன் பலன் பலர் இரத்தம் சிந்தி உயிரும் இழந்தனர். இந்நினைவையே உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்கம் மேதினமாகக் கொண்டாடுகிறது.

முழுக்க முழுக்க முதலாளித்துவ அமைப்பில் நம்பிக்கை கொண்ட யு. என். பி யினரும் இந்நாளைக் கொண்டாடுவது தான் பெரிய வேடிக்கை!

✻

க. மோகனதாஸ்
யாழ்ப்பாணம்

கே: தலைவர்கள் அமிர். சிவா பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: ஈழத் தமிழர்களின் இரண்டு கண்கள் இவர்கள். நமது கண்ணை மூடிக்கொண்டே நாம் இவர்களை நம்பிப் பின் செல்லலாம்.

✻

நி. யோகேந்திரா
கைதடி தெற்கு
கைதடி

கே: மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் பங்கு என்ன?

ப: 1977 ஆடிப் பொதுத் தேர்தலில் தமிழ்ப்பேசும் மக்கள் செலுத்திய பங்கை விட, இந்தத் தேர்தலில் இன்னும் அதிகமாகவே தர வேண்டும். நமது ஒன்றுபட்ட ஒற்றுமையை, தமிழீழக் கோரிக்கையை நமக்குள் பரிபூரண நம்பிக்கையை உலகத்திற்கு எடுத்துக் காட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் அரியதொருசந்தர்ப்பம்- நழுவ விடாதீர்கள்!

✻

செல்வி. க. கமலாதேவி
மட்டக்களப்பு

கே: இலக்கியம்- அரசியல் இரண்டையும் பிரிக்கவே முடியாதா?

ப: வசந்த காலத்திலிருந்து இதமான காற்றையும் எரிக்கும் வெயிலையும் பிரிக்க முடியுமானால், நீங்கள் சொல்லும் இரண்டையும் வேறுபடுத்தி வைக்கலாம். என்னைப் பொறுத்தவரை- இலக்கியம்-அரசியல் இரண்டிலும் ஒரே நேரத்தில் ஈடுபாடுள்ள எவரும் வசந்தகாலத்தில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

✻

கே: 'அங்கும் இங்கும் மீன் பாயும் நீரோடையல்ல' என்னும் சினிமாப்பாடல்வரிக்குப் பொருள் விளங்கவில்லையே!

ப: இளமங்கை ஒருத்தியின் கண்ணின் புறவடிவை நீரோ[illegible]

... தேர்தலைப் பகிஸ்கரிக்கவேண்டுமென்று சிலர் சொல்கிறார்களே!

ப: தமிழீழத்தில் சிங்கள இனவாத யு. என். பியின் செல்வாக்கு நிலைபெறவும், தமிழீழம் கனடாவின் கியுபெக்காக மாறிவிட்டதென உலகம் அறியவுமே தேர்தல் பகிஸ்கரிப்பு உதவும்.

தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைமைமீது சிலருக்குள்ள தனிப்பட்ட கோபத்தால் இப்படித் தத்துப்பித்தென்று உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்- இந்தச் சின்ன மனிதர்களின் உளறல்களை சீரியஸாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.

✻

கே: நடைபெறவிருக்கும் அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள ஏழு மாவட்டங்களையும் த.வி.கூட்டணி கைப்பற்றுமா?

ப: நிச்சயமாக! அமைச்சர் தேவநாயகத்தின் மேதினப் பேச்சே தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாபெரும் வெற்றிக்குக் கட்டியம் கூறுகின்றது. இனவாத யு.என்.பிக்கெதிராக ஒன்றுபட்டிருக்கும் தமிழ்ப் பேசும் மக்களை பயமுறுத்தியாவது பணிய வைக்கலாம் என்று எண்ணும் தேவநாயகம் ஆனி நான்கில்வாங்கிக்கட்டத் தான் போகிறார்.

## தமிழாராய்ச்சி மாநாடு

மதுரையில் நடைபெற்ற 5வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றிய திரைப்படம் வெகுவிரைவில் வெண்திரையில் வருமென தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் மதுரையில் நடந்த கண்காட்சி விழாவில் இதனைத் தெரிவித்தார்.

---

### மாவட்டசபை அதிகாரங்கள் பற்றி வவுனியா பா. உ.

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு எந்தெந்த அதிகாரங்கள் உள்ளன என்பது சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. அதே வேளை அரசினதோ அன்றி ஒரு தனி அமைச்சரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் பேரிலேயோ இச் சபையின் அதிகாரங்கள் தங்கியிருக்கவில்லை. வடக்கு கிழக்கிலுள்ள சு. கட்சி ஆதரவாளர்கள் சிலவேளை எமது அணிக்கு வாக்களிக்கலாம் அதைக்கண்டு அமைச்சர் ஆத்திரமடையக் கூடும்(அமைச்சர்தேவநாயகம்)

மாவட்ட அபிவிருத்திச் சபையின் அதிகாரங்களைக் குறைக்கவோ கூட்டவோ தம்மால் முடியுமென அமைச்சர் கூறுவது வேடிக்கையானது. இவ்வாறு வவுனியா பா. உ. திரு தா. சிவசிதம்பரம் அவர்கள் பட்டாணிச்சி புளியங்குளத்தில் நடைபெற்ற கூட்டணி வேட்பாளர் பாராட்டுக் கூட்டத்தில் கூறினார்.

---

# காயான்கேணி செ[illegible] கதிரவெளி வரை --- அபிவிரு[illegible]யைக் காணோம்!

ஆசிரியர்
அவர்கட்கு,

மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதாக அடிக்கடி அலசிவரும் அமைச்சர் தேவநாயகத்தின் வாய்மொழிகள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதை அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்குடா தொகுதியின் மூலை முடுக்குகளைக் கண்ணுற்றால்விளங்கும். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச்சொல்லவேண்டும். அரைவாசியையாவது செய்துவிட்டு 'முடித்து விட்டேன்? என்றால் ஒத்துக்கொள்ளலாம். அரைகுறையாகச் செய்தாலும் பரவாயில்லை! முழுமையாகவே செய்யாமல் இப்படி அலசித் திரிவது நியாயமா?

கல்குடாத் தொகுதியில் அபிவிருத்தியில் மிகமிகப் பின் தங்கிய பகுதி கோறளை வடபகுதியென்றால் எவரும்ஏற்றுக் கொள்வார்கள்.காயான்கேணி தொடக்கம் கதிரவெளிவரையும் சவனிப்பாரற்ற நிலையில் பாலைவனங்களாகப் பரந்து விரிந்து கிடக்கும் கோறளை வடக்கில் இககிராமங்களின் பரிதாபமான காட்சி---அன்று அமைச்சர்களின் பசப்புமொழிகளை நம்பி, கரும்புள்ளிகளைக் கடதாசியில் இட்டு-- அவரைப் பெரும்புள்ளியாக்கிவிட்டு ஏமாளிகளாகி விட்ட ஏழை மக்களின் இழிநிலை--- அலங்கோலமாகக் காணப்படும் இப் பகுதிக் கிராமங்கள் அபிவிருத்தியடைவது எப்போது? வறுமையின் விளிம்பில் விசும்பிக் கொண்டிருக்கும் அப்பாவ மக்களின் அபிலாசைகள் தேவைகள்நிறைவுசெய்யப்படுவ்வளப் போது? ஏனிந்தப் பராமுகம்? இங்குள்ள கிராமங்களின் குன்றிய நிலைக்கும், பலதுறைகளிலும் பின்-- அதுவும் மேற்கொள்ளப்படாமல் பலகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதே காரணமாகும். திண்டாடும் மக்களின் அற்பசொற்ப சலுகைகளைக் கூட சமனுக்க திராணியற்றவரா தேவநாயகம்? இந்தச் சரித்தரத்தை மாற்றியமைக்க கௌரவ உள்துறை அமைச்சர் அவர்களால் முடியாமல் போய்விட்டதற்குக் காரணம்-- கவலையீனமா? அல்லது பரமசிவன் கழுத்தில் இருந்து "கருடா சௌக்கியமா? என்றுகேட்கும்பாம்பின் நிலையில் அவர் இருக்கிறார

கோரளை வடக்கின் நுழைவாயில் காயான்கேணி, இது மிகவும் பின் தங்கிய கிராமம் பலதுறைகளிலும் விருத்தியின்றி பிற்போக்கான பகுதியாகவே இருந்து வரும் இக்கிராமத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் எத்தனையோ உண்டு சென்ற பொதுத் தேர்தலின்போது இப்பகுதி மக்களுக்குதேவநாயகம் அளித்த வாக்குறுதிகள் இவை.

- ✻ வீடமைப்பு
- ✻ போக்குவரத்து வசதி
- ✻ தபால்சேவை
- ✻ பாடசாலைவிருத்தி
- ✻ மீன்பிடித்தொழில் விருத்தி
- ✻ குளம்கட்டுதல்--

நாட்கள் உருண்டோடி அரசாங்கம் பதவியேற்று அந்தோ மூன்றுவருடங்கள் பூர்த்தியாகி நான்காவது வருடமும் நிறைவடையும் நிலையில் உள்ளது. இன்னும் தேவநாயகம் சொன்னதில் ஒரு பங்கைத்தானும் செய்து முடிக்கவில்லை. இற்றைவரையும் எந்தவித அபிவிருத்தி முயற்சியும் இங்கு ஏற்படுத்தப்படவில்லை. பழைய நிலை தொடர்கிறது--- அங்கொன்றும் இங்கொன்றுமாக காட்சிதரும் ஏழை மக்கள் குடிசை வீடுகள்--- பாழடையும் நிலையில் ஒரு சிறிய பாடசாலை---பொய்த்துவிட்ட போக்குவரத்து வசதி--- நம்பிக் கெட்டு நாசமாய்ப் போய்விட்ட மக்களின் அவல வாழ்வு----

இது இவ்விதமிருக்க சென்ற 80-03-81 ல் தேவநாயகம் காயான்கேணிக்குவிஜயம் செய்து பழைய பல்லவியைப் பாடிவிட்டுப் போய்விட்டார். அன்று அவருடைய நெருங்கிய ஆதரவாளர்கள். கனநாட்களுக்குப் பிறகு வந்த ஐயாவைக் காணச் சென்றனர். வழக்கம்போல் மாலை மரியாதைகள்--- அன்று கொடுத்த பழைய வாக்குறுதிகளை நினைவுபடுத்துவதுபோல் தமது கோரிக்கைகளடங்கிய படிவம் ஒன்றை ஐ. தே. க. கிளை தலைவர் கையளித்தனைத் தொடர்ந்து அமைச்சரின் பழைய வாக்குறுகள், கொடுத்த உறுதிமொழிகளை எல்லாம்காற்றோடு பறக்கவிட்டு இன்னுமின்னும் எந்த முகத்தைக் கொண்டுதான் தேவநாயகம் மக்கள் மத்தியில் அந்தரிக்கின்றாரோ தெரியவில்லை. இருந்தாலும், நெருங்கிக் கொண்டிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கும் தேவாவின் இந்தக் திடீர் வருகைக்கும் இடையிலுள்ள தொடர்பை மக்கள் அறியாதவர்களா? என்ன?

குட்டக்குட்டக்குனிந்து கொண்டு தேவநாயகத்தின் அடிவருடிகளாக "ஐயா! ஐயா!" என்று அலறிக் கொண்டு தொடர்ந்து திரியும் ஒருசிலரை போல இருக்கின்ற எல்லோரும் ரோசம்மில்லாதவர்களாக இருப்பார்களென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஏமாற்றப்பட்ட ஏழை மக்களின்மனக்கு முறல்கள் என்றைக்காவது ஒருநாள் எரியும் தணலைக் கொப்பளிக்கும் எரிமலையாக வெடிக்கும் வெடித்தே தீரும், அப்பாவி மக்களின் அற்ப சொற்பஆசைகளை, தேவைகளை முடித்து வைக்க முடியாதவருக்கு அபிவிருத்தி அபிவிருத்திஎன்று வாயைப் பிளந்து பிதற்றித் திரிவதற்கு என்ன அருகதையிருக்கிறது.

--"கேணியூரான்"




---

## திருமலைப் பா. உ. திறந்து வைப்பார்

ஆறுலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள திருமலை நகராளுமன்ற பொதுநூல் நிலையத்துற்கான கட்டிடத்தை வைகாசி மாத நடுப்பகுதியில் திருமலை பா. உ. திரு. சம்பந்தன் அவர்கள் திறந்து வைப்பார்.

---

## தமிழ்க்கொலை!

புத்தளம் பிரதேச வைத்திய அதிகாரியின் காரியாலயத்திலுள்ள பெயர்ப்பலகையில் மலேரியாத் தடுப்பு இயக்கம் என்ற வசனம் மலேரியாத் தடுப்பு இயக்கம் என்றும் புத்தளம் "புத்தனம்" எனவும் எழுதப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# ஆதிக்க சிங்கள ஆட்சியிடமிருந்து தமிழ் மண்ணைப் பாதுகாக்க

மாவட்ட அபிவிருத்திச் சபைகள், ஆட்சிஅதிகாரத்தை ஓரளவுக்குப் பரவலாக்கி இலங்கை முழுவதிலும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் மக்களுக்குப் பல துறைகளில் தத்தம் அலுவல்களை நிர்வகிக்கும் உரிமையை வழங்குகின்றன. இவற்றினால் தமிழ்த் தேசிய இனம் தன் சுதந்திரத்தையோ. சுயாட்சியையோ பெறுகின்றது என்று நாம் கூறவில்லை. சுதந்திர தமிழீழ சமதர்மக் குடியரசை நிறுவுவதன் மூலமே தமிழ்த் தேசிய இனம் தன் விடுதலையைக் காணமுடியும். இதை யொட்டி எவர் மனதிலும் எள்ளளவும் சந்தேகம்இருக்கத் தேவையில்லை. விடுதலைக்காக உழைத்துக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் எமது மண்ணைப் பாதுகாத்து, எமது பொருளாதாரத்தைவளர்த்து, தமிழ்பேசும் மக்களைத் தம் சொந்த மண்ணில் வாழவைக்க எம்மாலியன்றவற்றைச் செய்வது அத்தியாவசியம் என நாம் கருதுகிறோம்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இந்தநோக்கம் நிறைவேறப் பயன்படக்கூடிய கருவிகள் என்று அவற்றை ஆக்குவதில் பெரும்பங்கு கொண்ட பேராசிரியர் ஏ. ஜயரட்ணம் உவில்சன் கூறுகிறார். ''ஏற்ற முறையில் இந்த அமைப்பைத் தொழிற்படுத்தினால் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்தும், அரசாங்க சேவையில் தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்ளக் கூடியவகையிலும், தமது அன்றாட சீவனோபாயத்தை நாடிச் சிங்கள மாகாணங்களுக்கு இடம் பெயரும் உளப்பாங்கைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வகையிலும் தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தியும், கருத்துள்ள தனியான வாழ்வு ஒன்றின் நற்பயன்களை இந்த அமைப்பு மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். தமதுபாரம்பரியத்தாயகத்தை மாற்றார் ஊடுருவலிலிருந்து பாதுகாக்கவும் இவ்வமைப்பு வழிவகுக்கும்'' என்று பேராசிரியர் உவில்சன் கூறுகிறார்.

இந்த நோக்கம் நிறைவேறுவதற்குத் தமிழ்ஈழத்திலுள்ள அபிவிருத்திச்சபைகள்எல்லாம் தமிழ்த்தேசிய இனத்தின் ஒரே அமைப்பான தமிழர்விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலிருப்பது அத்தியாவசியம்.




வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தலைவர்கள் சேர்ந்து ஒரேசீரான கொள்கை ஒன்றின் அடிப்படைமீது ஒன்றிணைந்த நிர்வாகத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் அமைத்துக்கொள்வதானால் தமிழ் ஈழத்திலுள்ள அபிவிருத்திச்சபைத் தலைவர்கள் எல்லோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்தவர்களாக இருப்பதும், தமிழ்த்தேசிய இனத்தின் நீண்ட நாளைய நலனைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருங்கே முன்னேற்றக்கூடிய சபைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவுசெய்வதும் அதிமுக்கியமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் பல தமிழ் மாவட்டங்களில் பெரும்பாலோராயிருப்பதால் இந்நிலை சுலபத்தில் அடையக்கூடிய ஒன்றாகும். தென்னிலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும்

## அபிவிருத்திச்சபை ஓர் அரண்!

ஆளும் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலோராயிருப்பதும், அதனால் எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்றாலும் அபிவிருத்திச்சபைகளில் ஆணை செலுத்த முடியாதென்ற நிலையும் தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரை இல்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அபிவிருத்திச் சபைகளைப் பூரணமாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்து அவற்றைத் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் பல நூற்றாண்டு கால அந்நிய ஆட்சியிலும், கடந்த முப்பத்துமூன்று வருடப் பேரின ஆட்சியிலும் அனுபவித்த புறக்கணிப்பைக் களையக் கிடைக்கும் வாய்ப்பைத் தவறவிடவேண்டாமென்று தமிழ் பேசும் மக்களை வேண்டுகிறோம்.

இத்தேர்தலில் கொள்கையோ அதிகாரத்திற்கு வரும் வாய்ப்போ அற்ற சில சுயேச்சைக் குழுக்களைத் தவிர எம்முடன் போட்டியிடும் ஒரே கட்சி ஆளும் ஐக்கியதேசியக் கட்சியேயாகும். இக்கட்சியின் கடந்த நான்கு வருட ஆட்சியில் இத்தீவடங்கலும் வாழும் ஏழை மக்கள் பொதுவாகவும், தமிழ்பேசும் மக்கள் குறிப்பாகவும் அடைந்துவரும் துன்பங்களை உணர்வோர் எவரும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கமாட்டார்கள்.



1. முப்பது வருடகாலமாக மக்கள் அனுபவித்துவந்த பங்கீட்டுணவைப் பறித்தது.

2. ரூபாவின் மதிப்பைக் குறைத்து, வாழ்க்கைச் செலவை முன் எப்போதும் இல்லாத வகையில், ஏழை நடுத்தர வகுப்பு மக்கள் தத்தளிக்கும் அளவுக்கு உயரச்செய்தது.

3. தாங்கமுடியாத வாழ்க்கைச் செலவுப் பழுவைக் குறைக்க வேண்டிச் சம்பள உயர்வுகோரி வேலைநிறுத்தம் செய்த அரசதுறை ஊழியர் பல்லாயிரம் பேரை வேலைநீக்கம்செய்து அக்குடும்பங்களை நிர்க்கதியாக நிற்கவிட்டது.

4. பயங்கரவாதத் தடைச் சட்டம், பொது அத்தியாவசியச் சேவைச் சட்டம், குற்றவியல் நடைமுறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆகியவற்றினால் அவசரகால நிலையிலும் மோசமாக அடிப்படை மனித உரிமைகளைப் பறித்தமை.

5. ஒரே கட்சி ஆட்சியை ஏற்படுத்தும் வகையில் முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைமைகளைச் செயலற்றவையாக்கவும் குடியியல் உரிமையற்றவையாக்கவும் எடுக்கப்பட்டு வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள்-- இவை மக்கள் எல்லோரையும் பாதிக்கும் அரசின் செயல்கள் என்பதை மக்கள் நலனை, அடிப்படை மனித உரிமைகளை, ஜனநாயக உரிமைகளை விரும்பும் எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இத்தகைய அநியாயங்களுக்குப் பொறுப்பான ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்க முடியாதென்பதை உணர்வோர் அக்கட்சியை எதிர்த்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் ஒரே கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே வாக்களிக்குமாறு வேண்டுகிறோம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**
**மாவட்ட அபிவிருத்திசபைத்தேர்தல்**
**1981**
**கொள்கை விளக்கம்**

இன்றைய ஆட்சியாளரின் செயல்களில் தமிழ்பேசும் மக்களைக் குறிப்பாகப் பாதிக்கும் பாரதூரமான சிலவற்றையாவது இங்கு சுருக்கமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும்:-

1. கல்வியில் தரப்படுத்தலை ஒழிப்போம் என்று தேர்தலில் உறுதி கூறிவந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் 1978 இல் தகுதி அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கினர். கணிசமான அளவு தமிழ்பேசும் மாணவர் அனுமதி பெறுவதைக் கண்டவுடன் தமிழ் விரிவுரையாளர் மீது அபாண்டமான குற்றத்தைச் சுமத்தி மாவட்ட ரீதியில் அனுமதி என்ற திட்டத்தைக் கொண்டுவந்தனர். அதன் கீழும் 1979 இல் பின்தங்கிய தமிழ் மாவட்டங்களிலிருந்து குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையில் தமிழ்பேசும் மாணவர் அனுமதிபெற்றதை மாற்றி 1980 இல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழ்பேசும் மாணவர்களின் அனுமதி எண்ணிக்கையைச் சூழ்ச்சியினால் குறைந்துவிட்டனர். தகுதிபெற்ற மாணவர் பலரை பல்கலைக்கழக அனுமதியின்றித் தெருவில் நிற்கவைத்தனர்.

2. கடந்த நான்கு ஆண்டுகளில் அரசதுறைகளில் வேலைவாய்ப்பு வழங்குவதில் மிக மோசமான இன ஒதுக்கல் கொள்கையைக் கையாண்டு வழங்கப்பட்ட மொத்த வேலைகளில், இலங்கையில் 27 வீதமான தமிழ்பேசும் மக்களுக்கு 5 வீதம் கூடக் கிடைக்காது செய்தனர். கடந்த முப்பது வருடங்களில் இத்தகைய பாரதூரமான இன ஒதுக்கல் வேலை வாய்ப்பு விடயத்தில் முன்னெப்போதும் நடைபெற்றதில்லை.

3. வெளிநாட்டு உதவியோடு மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் ஒன்றுதானும் இதுவரை இடம் பெறாது ஐக்கியதேசியக்கட்சி அரசினால் அவை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

4. அரசாங்கத்தின் தவறான இறக்குமதிக் கொள்கையினால் தமிழ் பேசும் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களான மிளகாய்,வெங்காயமும், தமிழ் பேசும் மீனவர் உற்பத்தி செய்யும் கருவாடும் நியாயமான விலையைப் பெறமுடியாது திட்டமிட்டுத் தடுக்கப்பட்டு எம்மக்களின் பொருளாதாரம் பெரும்பாதிப்புக்குள்ளானது.

5. மகாவலி அபிவிருத்திக்குக் கோடிக்கணக்கில் செலவிடும் அரசாங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மானவாரி நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்காகச் சிறிய குளங்களைத் திருத்திச் சிறுதொகைப்பணத்



தையாவது செலவிடாமலும், அதே நேரத்தில் உற்பத்திச் செலவு அதிகரிப்பால் திணறிக் கொண்டிருக்கும் நெல் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த உத்தரவாத விலையை வழங்குவதாலும் அவர்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விட்டது.

6 வடபகுதியில் இடம் பெற்ற சில வன்முறைச் சம்பவங்களைக் காரணங்காட்டி ஒரு பாவமும் அறியாத பொது மக்களைச் சந்திகளிலும், தெருக்களிலும் சிறுமைப்படுத்தவும், பரீட்சை எழுதவேண்டிய பல்கலைக்கழக மாணவர் உட்பட இளைஞர் பலரைக் கைது செய்து யாருமறியாத இடங்களில் வாரக்கணக்கில்

(6-ம் பக்கம் பார்க்க)

## இனவிரோத யு. என். பி.யை முறியடிக்க தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உங்கள் வாக்குகளைத் தாருங்கள்!

படிப்பகம்

www.padippakam.com



# இளந்தளிர்கள் கொய்யப்படுகின்றன

நீர்வேலிக் கொள்ளையை அடுத்து- யாழ் மாவட்டத்து நிலைமை மோசமாகி விட்டது.

1979ல் அவசரகாலச்சட்டத்தைப் பிறப்பித்து விட்டு- ஆட்சியாளர் நடாத்திய அராஜகமே மீண்டும் இங்கே தொடர்கிறது.

இளந்தளிர்கள் அப்போது கொய்து எறியப் பட்டன- வேறு சில இனவெறியர்களின் காலின் கீழ் அகப்பட்டுக் கசங்கின!

இது இலங்கைத்தீவா? அல்லது ஹிட்லர் காலத்து ஜெர்மனியா?

முஸோலினியின் முகமும் ஜே. ஆர். முகமும் ஒன்றா?

**பதினான்கு வயதுப் பாவை ஆன்பிராங்! நெதர் லாந்தைச் சேர்ந்த அந்த நீலவிழிப் பூவுக்கு ஹிட்லர் தர்பாரில் என்ன நேர்ந்ததோ- அதனையே நமது இளந்தளிர்கள் இங்கே சந்தித்துக் கொண் டிருக்கின்றன.**

பல்கலைக்கழக மாணவனும் பகற்கொள்ளைக் காரனாக இருப்பான் என்ற சந்தேகம்- ஜே. ஆர். ஆட்சியில் தான் ஏற்பட்டுள்ளது.

பறவைகளைக் கலைக்கப் பட்டாசு சுடுவது தானும்- பயங்கரக் குற்றமாகும் என்ற விபரமும் இப்போது தான் நமக்குத் தெரிகின்றது.

முதியவர் ஒருவரின் வாழ்க்கைக்கு இதனால் முற்றுப்புள்ளியே விழுந்துவிட்டது.

இராணுவம் வளைய வளைய வருவதன் மர்மம் என்ன?

சிங்களவர்கள் - சிறிலங்கா ஆட்சியின் செல் லப் பிள்ளைகள் - தமிழர்கள் அந்தத் தகுதியைப் பெறாதவர்கள் என்கின்ற இனபேத உணர்வு தானே இதற்குக் காரணமாக இருக்கமுடியும்?

தமிழன் என்றாலே யு. என். பி. ஆட்சியின ருக்கு ஒருவித தாகம் - அவர்கள் தலையிலிருந்து ஒரு மயிர்கூட உதிர்ந்து விடக்கூடாது என்பதில், ஆட்சியினருக்கு அளவுக்கு அதிகமாகவே அக்கறை- அதனால்தான் நடுநிசியில் கூட இராணுவப் படையை ஒவ்வொரு தமிழன் வீட்டிற்கும் அனுப்பி வைக்கின்றது.

**இராணுவ உடையிற் சென்றால் - வீட்டில் இருக் கும் சின்னஞ்சிறு குழந்தைகள் பயந்துவிடுவார்கள் என்ற உயர்ந்த பண்பாடோ என்னவோ, சிவில் உடை யிலும் சில மனிதர்களை அனுப்பி வைக்கின்றது.**

அப்பப்பா... என்ன பாசம்... என்ன நேசம்!

ஜே. ஆர். அவர்களே!

இந்தப் பாசமும் நேசமும் எங்களுக்குத் தேவையில்லை!

முப்பது ஆண்டுகளாக நீங்கள் காட்டிய பாசத்தின் விளைவே நாங்கள் எடுத்துக்கொண்ட ஒரேஒரு முடிவு, தமிழீழம் - தமிழர்க்கென ஒரு நாடு!

இந்த முடிவிலிருந்து நாங்கள் இம்மியளவும் விலகப்போவதில்லை!

எதிர்காலத்தில் இங்கே தமிழன் என்றொரு இனமே இருக்கக்கூடாது என்ற வெறியினால் தான் - எங்கள் இளந்தளிர்களையெல்லாம் கொய்து கொண்டிருக்கிறீர்கள்.

முடிந்தால் முழுவதையுமே கொய்து பாருங் கள்.

**துச்சாதனன் உரிந்த துரோபதையின் துகில் போல நாங்கள் வளர்ந்துகொண்டே இருப்போம்.**

நீங்கள் மயங்கி நிலத்தில் விழத்தான்போகி றீர்கள் - இது நிச்சயம்!

காராக் கிரகத்தில் கண்ணீர் மட்டுமா- செந் நீரும் கடலாகப் பெருக்கெடுத்தோடியது.

தமிழ் அன்னை தணலில்வீழ்ந்த மெழுகானாள்- தரணிவாழ் தமிழரின் உடலெல்லாம் துடித்தன-

இளவிடுதலைப் போராட்டத்தை தமது இரத்தத் தால் எழுதிய ஆறு உயிர்கள் இன்று நம்மிடையே இல்லை!

அவசரகாலச்சட்டத்தைப் பிறப்பித்து விட்டு- அன்று ஜே. ஆர். ஆடிய ஊழிக்கூத்து- இன்று பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பல மடங்கு கொடூரமாக நடைபெறுகின்றது.

எள்முனையளவு சந்தேகம் கூட வேண்டிய தில்லை- நமது இளந்தளிர்களை நோக்கி ஆட்சியாள ரின் இரும்புக் கரங்கள் நீளுகின்றன.

கொய்யப்பட்ட தளிர்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டு எந்தக் கூடைக்குள் கொட்டப் படுகின்றன என்ற செய்தி- அந்தத் தளிர்களை இழந்ததால் பட்டமரமாகக் காட்சியளிக்கும் பெற்றோருக்கே தெரியவில்லை.

இதைவிடக் கொடுமை வேறென்னவேண்டும்!

வீதியில் மக்கள் நடமாடுவதும் இந்த ஆட்சி யைப் பொறுத்தவரை ஒரு விபரீதமான செயலே தான்!

களவு போன பணத்தை எப்படியாவது கண்டுபிடித்தே ஆகவேண்டுமென்ற எண்ணம் ஆட்சியாளருக்கு வெறியாகவே ஆகிவிட்டதால்- தமிழன் வீடெல்லாம் அவர்களுக்குப் பணப் புதையலாகவே தெரிகின்றன.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் மட்டும்தான் கொள்ளையர்கள் - கொலை காரர்கள்.

தெற்கில் வாழ்வோரெல்லாம் தெய்வங்களே என்ற எண்ணம் இந்தச் சிங்கள அரசுக்கு ஏற் பட்டுள்ளதா?

இலங்கைத்தீவில் - கொலை - கொள்ளை எங்கே தான் நடைபெறவில்லை?

நீர்கொழும்பு - கேகாலை போன்று இந்நாட் டில் நாற்பது இடங்களில் வங்கிக் கொள்ளைகள் நடைபெற்றிருந்தும், வடக்கில் மட்டும் சிங்கள

**ஆசிரியர் பேசுகிறார்**

# தொழிலாளர் விரோத அரசைத் தூக்கி எறிவோம்!

## கொழும்பு மேதினக் கூட்டத்தில் ★ 'தர்மர்' சபதம்! ★

**"திருத்தப்பட்ட அரசியலமைப் புச் சட்டத்தினதும், நீதிக்குப் புறம்பான - ஜனநாயக விரோத- சர்வாதிகார சட்டங்களினதும் ஆதரவில்தான் இன்றைய அரசு நீடித்திருக்கிறதே தவிர, மக்க ளின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்தலல்ல அரசாங்க உறுப்பி னர்கள் கட்சி மாற முடியாதபடி அரசியலமைப்புச் சட்டம் திருத் தப்பட்டிருக்காவிடின் இந்த அர சாங்கம் எப்போதோ வீடு செல்ல நேர்ந்திருக்கும்."**

'கம்பல் பார்க்' மைதானத் தில் நடைபெற்ற ஐ தே. க. எதிரணி ஐந்து கட்சிகளின் மே தினக் கூட்டத்தில் தமிழர் விடு தலைக் கூட்டணியின் சார்பில் கலந்துகொண்டுஉரையாற்றிய மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம் இவ்வாறு கூறி னார். அவர் மேலும் கூறிய தாவது:-

ஐ. தே. க. அரசாங்கத்தின தும, அதன் தலைவரினதும் பேச்சுக்களிலிருந்து எதிர்க் கட்சிகளின் கூட்டுக் குறித்து அவர்களின் சஞ்சலம் தெரி கிறது. 1953-ம் ஆண்டு டட்லி சேனநாயக்கா ஆட்சியின் போதும் விலைவாசி உயர்வுக் கும் தொழிலாளர் உரிமைப் பறிப்புக்கும் எதிராக எதிர்க் கட்சிகளின் ஹர்த்தால்தான் அந்த அரசாங்கத்தின் வீழ்ச் சிக்குக் காரணமாக இருந்தது.

கூட்டுச்சேர்ந்தஎம்மிடையே கருத்து வேற்றுமைகள் இருக்க லாம். சிலசமயங்களில் கட்சிக் குள்ளேயே கருத்து வேறுபாடு கள் எழுவதும் இயற்கையா னதே, ஆனால் இவை ஒற்று மையைக் குலைத்துவிடா. நாம் மக்களின் சில அடிப்படைத் தேவைகளினிமித்தமேயன்றி, தேர்தலுக்காகவோ அல்லது வெற்றியைப் பகிர்ந்துகொள் வதற்கோ கூட்டுச் சேரவில்லை.

தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் வெற்றிக் காகவுமே உலகெங்கும் மே தினம் கொண்டாடப்படு கிறது. ஆனால் காலிமுகத் திட லில் இன்று நடைபெறும் மே தின வைபவத்தில் ஹிந்தி சங் கீதம் நடைபெறுகிறது. ஹிந்தி சங்கீதம்தான் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றியென நான் கருதவில்லை. இந்நாட் டில் தொழிலாளர்கள் இன்று ஓர் இக்கட்டான கட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களது உரிமைகள் சட்டங்களின் மூலம் ஒவ்வொன்றாகப் பறிக் கப்படுகின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டலுக்கு இடமளிக்கப்படுகிறது. விலை வாசிகள் என்றுமில்லாதவாறு உயர்ந்து செல்கின்றன. அர சியல் வஞ்சம் தீர்ப்பதற்காகத் திருமதி பண்டாரநாயக்கா வின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் அநியா யச் சட்டங்களின் மூலம் திரு மதி பண்டாரநாயக்காவைப் பாராளுமன்றத்திலிருந்து அகற்றலாம்; ஆனால் மக்கள் மனதிலிருந்து அவரை எந்தச் சட்டத்தாலும் அகற்ற முடி யாது. இன்று இங்கு திரண்டி ருக்கும் ஜனவெள்ளமே இதற் குத் தக்க சான்றாகும். வேலை நிறுத்தத்திலீடுபட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் அரசின் நடவடிக்கையால் இன்று பட் டினியால் வாடிக்கொண்டிருக் கிறார்கள். பலர் தற்கொலை புரிந்திருக்கிறார்கள்.

வேலைநிறுத்தம் என்பது தொழிலாளரின் அனுமதிக்கப் பட்ட உரிமை - நடவடிக்கை. அது அவர்களின் சட்டபூர்வ மான ஆயுதம். அவர்கள் கேட் டது சம்பள உயர்வு ஒன்று தான். அரசாங்கத்தின் பிழை யான கொள்கைகளினாலேயே விலைவாசிகள் உயர்ந்தன. எனவே அதைச் சமாளிக்க சம் பள உயர்வு கோரியது பிழை யென எவரும் கூறமுடியாது. மக்களின் — தொழிலாளரின் அடிப்படை உரிமைகளை, பௌத்த தர்மம் பற்றியும், தார்மீக சமுதாயம் பற்றியும் மலைப்பிரசங்கம் செய்யும் அர சாங்கம் உணரவேண்டும். மனித உரிமைகளின் அடிப் படையில் கேட்கிறோம். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்துநிற்கும் அனைவரையும் மீண்டும் வேலையில் அமர்த்துங் கள். சிறை வைக்கப்பட்டிருக் கும் தர்மசேகராவை நீதிமன் றத்திற்குக் கொண்டுவாருங் கள், அல்லது விடுதலை செய் யுங்கள்.

### யு. என் பி. க் கெதிராக வாக்களிக்க மஜீத் வேண்டுகோள்

திருமலை மாவட்டத்தைப் பொறுத்தளவில் சுதந்திரக் கட்சியினரும் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட கட்சியினரும் யு. என். பிக் கெதிராக வாக்களிக்க வேண் டும். ஆட்சியின் சர்வாதிகா ரப் போக்கிற்கு நல்லதொரு பாடம் புகட்டவேண்டும்,

இவ்வாறு-- திருமலை மா வட்ட சுதந்திரக்கட்சிப் பிரமு கரும் மூன்னாள் மூதூர் எம். பியுமான ஜனாப் அப்துல்மஜீத் கிண்ணியாவில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் குறிப் பிட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



# இனத்துரோகிகள் கூடாரமாக மாவட்டசபை இருக்கக்கூடாது!

இலங்கைத்தீவில் உள்ள இருபெரும் நாடுகளுள் எமது நாடு தமிழ் ஈழம், 8000 ச.மைல்களைத் தன்னகத்தே கொண்ட- அதற்கென்று வரையறுக்கப்பட்ட ஆள்புல எல்லையைக் கொண்ட பூமி அது. 400 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நாம் நாமாக- தமிழர்களாக, நமது மொழி தமிழாக- நமது நாடு முடியோடும், கொடியோடும், நீதி நெறி வழுவாத ஆட்சியோடும் சுதந்திர தமிழ்ஈழமாக மிளிர்ந்ததை நாம் அறிவோம். எமது மாமன்னர்கள் எமது அயல் நாடான ஸ்ரீலங்காவையும் விட்டும் தொட்டும் மிக நீண்ட காலத்திற்கு ஆட்சிசெய்து பெரும் புகழ் பெற்றுள்ளார்கள். தீவுமுழுவதையும் ஆண்ட எல்லாளன், கடைசியாக கண்டியை ஆண்ட கண்ணுச்சாமி என்னும்பெயர்கொண்ட ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் போன்ற அரசர்கள் பெயர்கள் இன்றுங் கூட ஸ்ரீலங்காவினரின் வாயிலும், மனத்திலும் மருவிநின்று நர்த்தனமாடுவதைக் காணக் கூடியதாய் இருக்கின்றது. இலங்கையருக்கான முதலாவது சட்டசபை ஸ்தானம்வழங்கப்பட்டபோது அதை அலங்கரித்தவரும், சிங்கள- முஸ்லிம் கலவரத்தின் போதுதன்னந்தனியனாய் சீமை சென்று சமாதான உடன்படிக்கையுடன் மீண்டவரும், வெள்ளையனை வெளியேற்ற ஸ்ரீலங்காவினருடன் சேர்ந்து முன்னணியில் நின்று உழைத்தவருமான சேர்.பொன். இராமநாதன், அவர் இளவல் சேர். பொன். அருணாசலம் போன்றோர் ஸ்ரீலங்காப் பாராளுமன்ற வளவில் சிலையாக நின்று எமது பெரும்புகழை நாலா பக்கங்களுக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று நமது நிலை என்ன?

இலங்கைத்தீவுக்கு போர்த்துக்கேயர் வந்தபோதும் 100 ஆண்டுகளுக்கு எமது அரசர்கள் அசைந்து கொடுக்காது போரிட்டுவந்தார்கள். ஈற்றில் 1619ல் எட்டப்பர்களால்- காக்கைவன்னியர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டே அரசை இழந்தார்கள். போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் எமது நாட்டையும், ஸ்ரீலங்காவையும் தனித்தனியே தான் நிர்வகித்து வந்தார்கள். அவர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர் நிர்வாக வசதிகருதி கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுப்படி 1833ல் இருநாடுகளையும் வலுக்கட்டாயமாக ஒன்றிணைத்தார்கள். நமது வாழ்வில் நமக்கு மண்ணை அள்ளிப்போட்டவர்கள் ஆங்கிலேயர்கள்தான் வேறெவரும் இல்லை. அவர்கள் இத்தீவை விட்டு வெளியேறிய போதும் கூட, 1944ம் ஆண்டில் சிங்களமே இலங்கைத் தீவின் ஆட்சிமொழியாகவும், தேசிய மொழியாகவும் இருக்கவேண்டும் எனச் சட்டசபையிலே தீர்மானித்தவர்களிடம் அல்லவா ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார்கள்.

ஆங்கிலேயர் சென்ற மறுகணமே, ஸ்ரீலங்காவினர் தாமே எமக்கு அரசர்கள் என்ற எண்ணத்துடன் செயல்படத் தொடங்கினர். அது இன்றுவரைதொடர்கதையாக நடந்துகொண்டிருக்கின்றது. அதனால் நாம் அடைந்த சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள் அப்பப்பா; சொல்லுந்தரமன்று.

1948ம் ஆண்டிலேயே ஸ்ரீலங்காவிற்கு அந்நிய செலவாணியைஅள்ளிக்கொடுத்துக் கொண்டிருக்கும் தேயிலை, ரப்பர்தோட்டங்களில்மாடாக உழைத்து ஓடாக உருக்குலைந்து கொண்டிருந்த இந்தியத் தமிழர்களது குடியுரிமை வாக்குரிமை, அவர்களது பிரதிநிதித்துவ உரிமைஎன்பன பறிக்கப்பட்டன.

1948 இலிருந்து இன்றுவரை எமது அன்னை பூமியில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் செந்நெல் மணி விளையும் செழுமைமிகு களனிகளாம் அல்லை, கந்தளாய், கல்லோயா, சேருவில, வவுனியா என அநேக இடங்கள் நாளும் பொழுதும் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. அது மாத்திரமா? அவற்றின் அழகு தமிழ்ப்பெயர்களும் அல்லவா போகின்றன. நமது பாட்டனும், பாட்டியும் இன்றைய பெயர்களைத் தப்பித் தவறி உச்சரித்தால் அவர்கள் வாயில் எஞ்சியிருக்கும் ஓரிரு பற்களும் பொதுக்கென்று விழுந்துவிடும் அபாயம்கூட உண்டு.

1954ல் இங்கிலாந்து மகாராணி எலிசபெத் கொழும்பு வந்தபோது நாமும் இத்தீவில் இருக்கிறோம் என்பதை மறைக்க தமிழ் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

1956 மாசி 20ல் களனியில் நடந்த ஐ.தே.க. மாநாட்டில் எமது மொழிக்கு இருந்த சமத்துவநிலை தகர்க்கப்பட்டு, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்னும் கொள்கை ஏற்கப்பட்டது. அதனால் அதுவரை அங்கே ஒட்டிக்கொண்டிருந்த பல தமிழர்கள் கண்ணீருங் கம்பலையுமாய் வெளியேறினார்கள். அம்பாறை, கொழும்பு போன்ற இடங்களில் அநேக எம்மவர்கள் தாக்கப்பட்டார்கள்.

1958ல் தீவடங்கலும் மிகப் பெரும் அளவில் இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. எம்மவரின் கண்ணீராலும், செந்நீராலும் ஸ்ரீலங்கா கழுவப்பட்டது. எம் இனம் அடைந்த உயிர்ச்சேதம், பொருட்சேதம எண்ணிலடங்காது.

1961ல் தமிழீழத்தில் ஸ்ரீலங்காவின் ஆட்சி இரு மாதங்களுக்குத் தடைப்பட்டது. சகல பாகங்களிலும் இராணுவக் காட்டாட்சி கட்டவிழ்த்து விடப்பட்டது.

1974ல் காவல்படையினரின் காரணமற்ற தாக்குதலால் ஏதுமறியாத ஒன்பதின்மர் துடித்துப் பதைத்து உயிரிழந்தனர். நமது மொழிக்காக- கலை, கலாச்சார வளர்ச்சிக்காக- இலக்கிய ஆய்வுக்காக நடந்த மாநாட்டிலேயே



நமக்கு இந்தக்கதி ஏற்பட்டது. வேறு எதைத்தான் விட்டு வைப்பார்கள்?

1976ல் புத்தளம் பெரிய பள்ளிவாசலில்வழிபாட்டுக்குச் சென்றிருந்த இஸ்லாமிய சகோதரர்களையும், வேறு பல பாகங்களில் வாழ்ந்த இஸ்லாமியர்களையும் காவல்படையினரும், சிங்கள இனவெறியர்களும் சுட்டுக்கொன்று நடத்திய அனர்த்தங்கள் அநேகம்.

1977ல் தீவு அடங்கலும் மேற்கொள்ளப்பட்ட- இதுகாறும் நடைபெற்றிராத சிங்களபேரினவாத தாக்குதல். அதிலும் நமது தாயகத்தில்- தலைநகரில் நாம் தாக்கப்பட்டோம்; நமது தலைவர்கள் தாக்கப்பட்டார்கள். ஆங்காங்கே சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட நமது அருமைச்சகோதரர்களின் எண்ணிக்கை 300க்கும்அதிகம். பொருட்சேதம்... மலையகத் தோட்டங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட எம் உடன் பிறப்புகள் குப்பை ஏற்றும் லொறிகளில் ஏற்றப்பட்டு குப்பைகளாகவே வீசி எறியப்பட்டார்கள். அது மாத்திரமல்ல சிலையாக நின்ற பெரியோர்களையே இடித்துத் தள்ளினார்கள்.

பிதா, மாதா நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, பாடுபட்டு உழைத்த பணத்தையெல்லாம் கொட்டி, துயின்றும் துயிலாதும் படித்த போதும் இனவிகிதாசார அடிப்படையில் உயர்கல்வி எனக்கூறி படிப்பு பாழடிக்கப்பட்டது.

தொழில் துறையில் பாரபட்சம் காட்டப்படுகிறது. விலைவாசி உயர்வினால் வாழ்க்கைப் பளுவைத் தாங்கமுடியாது சம்பளஉயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்து இருந்த தொழிலையும் இழந்து அநேக குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன.

1979ல் காலக்கெடு கொடுத்து அவசரகாலச்சட்ட அமுல். அப்போது 6 மாதகாலத்துள் படைபட்டாளத்தால் குரூரமாகத் தாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட நமது இளைஞர்கள் தான் எத்தனை பேர். நம் அருமை உடன்பிறப்புக்கள் பட்ட அவலம் கேட்பார் மயங்கி விழும்படியானது. இரத்தத்தை உறையவைக்கும் படியானது; 20ம் நூற்றாண்டிலுமா இப்படி நடக்கிறது எனக்கேட்கும்படியானது.

ஆடைகள் களையப்பட்டு, நிர்வாணமாக்கி, மேசை லாச்சிக்குள் அந்தரங்க உறுப்புக்களை வைத்து நெரித்தார்கள்; தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டார்கள்;மயிர்களைப் பிடுங்கினார்கள்; சிகரெட் நெருப்பினாலே சுட்டார்கள்; இராணுவ வைத்திய அதிகாரி இனி நிறுத்துங்கள் மீதி நாளை என்று கூறும்வரை மிக மிலேச்சத்தனமாக-- மிருகத்தனமாகத் தாக்கினார்கள்: கதிரைகளுக்கிடையே கம்பைப்போட்டு, கம்பிலே தலையையும், காலையும் சுருட்டிக்கட்டி சுழற்றினார்கள்; தலைகீழாகத் தொங்கவிட்டு கீழே நெருப்பைக் கொளுத்தினார்கள்; நெருப்பிலே முழந்தாளிட்டு நடக்கவைத்தார்கள்; அவற்றை வெளியே சொன்னால் இன்பம், செல்வரத்தினத்திற்கு நடந்ததே நடக்குமென எச்சரித்தார்கள்.

அவற்றைவிட வல்வையில் சுபாஷ் சோமசுந்தரம் என்ற இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டான். இந்திரா என்ற இளைஞன் 36 காயங்களுடன் விளக்கமறியலில் இருந்த போது உயிரிழந்தான். பாலேந்திரா, இராசேஸ்வரன், பரமேஸ்வரன் என்ற இளைஞர்கள் இதுவரை என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அல்லைப்பிட்டிச்சந்தியில் இன்பம், செல்வரத்தினம் என்ற இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு அநாதரவாய்க் கிடந்தார்கள்.

இப்படிஎத்தனைஎத்தனையோ அவையனைத்தையும்எமது தலைவர்கள்ஸ்ரீலங்காப்பாராளுமன்றத்தில் உடனுக்குடன் எடுத்துக்கூறியும் நடந்தது என்ன? நாம் அவற்றிலிருந்து படித்தது என்ன? நம்மிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டதா?

## தந்தை அமைத்த தானை

கடந்த 30 ஆண்டுகளாக நமக்கு நடந்த அடக்குமுறைகளை-- அநீதிகளை-- அந்தந்த உடனேயே எடுத்துகாட்டி தமிழர் எதிர்ப்பியக்கத்தை கட்டிவளர்த்தவர் தந்தை செல்வா அவர்கள். அவரது வழிநடத்தலில் மிகவேகமாக வளர்ந்தவர்களே இன்றைய தலைவர்கள். 1970 ம் ஆண்டுத் தேர்தலின்பின் தந்தைசெல்வா மிக நிதானமாகச் சிந்தித்து 1972 ல் (14-5-72) திருமலைத் திருநகரிலே அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழர்களின் ஒரே இயக்கமாம் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். 14-5-76 ல் வட்டுக்கோட்டையில் நடந்த கூட்டணியின் முதலாவது மாநாட்டில், "எமக்கு-- ஈழத்தமிழனுக்கு சுதந்திரமும், இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட ஒரு சோஷலிசத் தமிழீழம் தான் முக்கியம் என்பதை இலங்கைத்தீவு வாழ் தமிழ்மக்கள் -- மொழியால்-- கலை, கலாச்சார பாரம்பரியங்களால்-- தனியான பிரதேசத்தில் சுதந்திர அரசாக வாழ்ந்த வரலாற்றால்-- தொடர்ந்தும் தனியினமாக வாழ்ந்து தம்மைத்தாமே ஆளும் உள்ள உறுதியால் சிங்கள இனத்திலிருந்தும் வேறுபட்ட ஓர் தனித்தேசிய இனம்" எனப் பிரகடனப் படுத்தினர்.

தந்தை செல்வா கண்மூடி மௌனியாகி பின் எமது இன்றைய தலைவர்கள் 1977 பொதுத்தேர்தலின்போது "தமிழ் தேசிய இனம் தனக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையைப் பிரயோசித்து தன் பூரண இறைமையைத் தனது தாயகத்தில் நிலைநாட்டவேண்டும். அத்தீர்மானத்தை சிங்கள அரசும், உலகநாடுகளும் அறியச் செய்வதற்கு ஒரேவழி இத்தேர்தலில் தமிழர் விடுத

(8-ம் பக்கம் பார்க்க)

## பழைய வரலாற்றை ஒரு பாடமாய்க் கொள்வோம்!

★ நாக- சாந்தலிங்கம் ★

படிப்பகம்

# இருபது லட்சம் உயிர்களைப் பலிகொடுத்தே அல்ஜீரியா சுதந்திரம் பெற்றது!

## மயிலைப் பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் மனோகரன் பேச்சு

**அல்ஜீரிய நாட்டு மக்கள், பிரெஞ்சின் ஆதிக்கத்திலே இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளப் போராட்டம் நடத்தியதன் மூலம் சுட்டுக் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை மாத்திரம் இருபது இலட்சம்!**

**அந்தச் சின்னஞ்சிறு நாடு இருபது லட்சம் பேர்களைப் பலி கொடுத்தது.**

**அத்தகைய சுதந்திரக் கனல் வெறி இன்றைக்கு உருவாகு மானால் என்ன ஆகும்?**

சென்னைமயிலாப்பூரில் நடைபெற்ற தி.மு.க பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையிலே நாஞ்சில் மனோகரன் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

உலகம் இரண்டு கூறுகப் பிரிந்து கிடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆரம்ப காலத்தில், உலகம் இரண்டு கூறுகப் பிரிந்திருந்த போது, அப்போது பேசப் பட்ட தத்துவங்கள் எல்லாம்- இந்தத் தத்துவங்கள் எப்படி எப்படி மாறிமாறி வந்திருக்கின்றன என்பதற்காகச் சொல்லுகிறேன்- இது முதலாளித்துவ முகாம்; இது சோஷலிச முகாம் என்று கூறப்பட்டது.

அந்தச் சத்தம் வலுக்க வலுக்க சோஷலிசம் என்ற சிந்தனையைக் கிளறுகின்ற அந்த இலட்சியப் பேச்சு ஜன சமுதாயத்தைக் கவரக் கவர, புதிய மாற்றங்கள் உருவாக ஆரம்பித்தன.

கம்யூனிசம்- சோஷலிசம் என்ற இந்த இரண்டையும் பேசிக்கொண்டே இன்னொன்றையும் சொன்னார்கள்.

இருப்பவர்கள்- இல்லாதவர்கள் என்ற இந்த இரண்டுக்கும் உள்ள இடைவெளியிலேதான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றார்கள்.

ஆக இருப்பவன் தான் வாழமுடியும்; இல்லாதவன் வாழ முடியாது என்ற தத்துவம் உதயமாக ஆரம்பித்தது.

அதற்குப் பிறகு ஒரு கட்டம் வந்தது.

எந்த நாடு போர் ஆயுதங்களை மிகஅதிகமான அளவுக்குக் குவித்து வைத்திருக்கிறதோ அந்த நாடு தான் வல்லரசாக இருக்க முடியும்; மற்றநாடுகள் சிற்றரசுகளாகத்தான் இருக்க முடியும் என்ற அளவில் நாடுகளும் இரண்டு கூறுகளாகப் பிரிந்தன.

ஆயுதங்களே இல்லாமலும் ஒரு நாடு இருக்க முடியும் என்பதைக் கூட சின்னஞ்சிறு நாடுகள் சிலகூட நிரூபித்துக் காட்டி இருக்கின்றன.

நான் அல்ஜீரியாவுக்குச் சென்றிருந்தபோது ஒரு சம்பவத்தை எனக்குச் சொன்னார்கள்.

இரவு விடுதிகள் அங்கே ஏராளம். ஒரு இரவுவிடுதியில் திடீரென்று பிரெஞ்சு ராணுவ வீரர்கள்- தளபதிகள் உள்ளே நுழைகிறார்கள். அங்கிருந்த மேஜை நாற்காலிகளை ஆக்கிரமித்துக்கொண்டு உட்காருகிறார்கள். அங்கே ஆடலழகி ஒருத்தி வருகிறாள். அவள் ஆடுவதற்கென்றே வருகிறாள். பூக்கூடை ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு அரங்கிற்கு வருகிறாள்.

அவள் வரும்போதே சில பிரெஞ்சு வீரர்கள் அவளது கையைப் பிடித்து இழுக்கிறார்கள். அவளோ சிரித்துக் கொண்டே அவர்களது கையையும் தட்டிக் கொடுத்து, கன்னத்தையும் தட்டிக் கொடுத்துக்கொண்டு அரங்கில் நுழைகிறாள்.

மேலாடைகளையெல்லாம் களைந்துவிட்டு அவள் ஆடிக் கொண்டே இருக்கிறாள். ஆடிக் கொண்டிருக்கும் போதே அவள், திடீரென்று பூக் கூடையில் கையை விட்டு, அதிலே தயாராக வைத்திருந்த இரண்டு வெடி குண்டுகளை எடுத்து, பிரெஞ்சு தளபதிகள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி வீசுகிறாள்.

அவர்கள் அத்தனைபேரும் பிணமாகிறார்கள். அவளும் பிணமாகிறாள்.

இந்த அளவு தியாகத்தின் மூலம், அந்தச் சின்னஞ்சிறு நாடு, பெரிய வல்லரசுகளைக் கூட வீழ்த்த முடியும் என்று அல்ஜீரியா உதாரணம் காட்டி இருக்கிறது.

52 கைதிகளை மட்டுமே கையிலே வைத்துக்கொண்டு அமெரிக்காவையே தலைகுனிய வைத்தது ஈரான் நாடு.

அந்த நாடுகள் தங்கள் போராட்டத்திற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை- வழிமுறைகளை நான் ஒப்புகிறேனா? இல்லையா என்பது வேறு விஷயம்.

ஆக வல்லரசுகள் வைத்துக்கொண்டுள்ள ஆயுதங்கள் முக்கியம் அல்ல; அரசியலிலே பெற்றிருக்கிற மன வலிமைதான் முக்கியம்.

அந்தச் சின்னஞ்சிறு நாடுகள் எந்த அடிப்படையில் பிரிந்து கிடக்கின்றன என்பதையும் சொல்லுகிறேன்.

டாலர் தேவதையா? ஸ்டர்லிங் தேவதையா? என்று பேசப்பட்டகாலமும்இருந்தது.

டாலருக்குள்ள மரியாதை ஸ்டர்லிங்கிற்கு இல்லை என்று சொல்லப்பட்ட காலமும் இருந்தது.

இந்நிலையில் நாடுகள் பிரிந்தபோது டாலரின் பின்னாலே பல நாடுகள் சென்றன. ஸ்டர்லிங்கிற்குப் பின்னாலேயும் பல நாடுகள் சென்றன.

அதற்குப் பிறகு ஒரு கட்டம் வந்தது.

எந்த நாடு அதிகமான அளவிற்குத் தங்கம் வைத்திருக்கிறதோ அந்த நாடுதான் உயர்ந்த நாடு; எந்த நாட்டிற்குத் தங்கம் இல்லையோ அது தங்க முடியாத நாடு என்று கருதப்பட்டது.

அப்படிப்பட்ட கட்டங்களையெல்லாம் தாண்டி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறசிக்கல் எந்த நாடு எண்ணெய் வளத்தை அதிகமாகப் பெற்றிருக்கிறதோ அவர்கள் தான் உலகத்தையே ஆட்டிப் படைக்க முடியும் என்பதற்கு ஆதாரமாக துபாய், சௌதி அரேபியா போன்ற சில நாடுகள் உலகை இன்றைக்கு மிரட்டிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், சூரிய வெப்பத்திலிருந்து எரிபொருள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற அளவிலும் சிலநாடுகள் தயாராகி வருகின்றன.

இன்றைக்கு இந்தியபிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இல்லத்தில் கூட இந்த 'சூரியசக்தி' தான் எரிபொருளாகப் பயன்படுத்தப் படுவதாக அவர்களே ஒரு கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவிலே ஓடுகின்ற பல கார்கள் 'பாட்டரி'யில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

பெட்ரோல் இல்லை என்றால் அதற்கு மாற்று கண்டு பிடித்தாக வேண்டும் என்ற நிலைமைக்குத் தங்களை அமெரிக்கர்கள் ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக நாடுகளின் எண்ணங்கள்- போக்குகள்- பார்வைகள் முடிவுகள் எல்லாம் காலப் போக்கில் மாறிக்கொண்டு வருகின்றன.

இத்தனைக்கும் இடையில் பயமுறுத்திக் கொண்டிருக்கின்ற ஒன்றே ஒன்று- இருப்பவன் ஒரு பக்கம்; இல்லாதவன் மறுபக்கம் என்பது.

மாட மாளிகைகளை ஒரு பக்கம் பார்க்கிறோம்; மண் குடிசைகளை இன்னொரு பக்கத்திலே பார்க்கிறோம்.

வியர்வைக் கடலில் நீந்துகிற கூட்டத்தை ஒரு பக்கம் பார்க்கிறோம். பன்னீர்க் கடலில் நீச்சலடிக்கிற கூட்டத்தை வேறொரு பக்கம் பார்க்கிறோம்.

அஜீரணக்கோளாறு காரணமாக அவதிப்படுபவர்களை ஒரு பக்கத்திலே பார்க்கிறோம்; பசிக்கொடுமை தாங்கமுடியாமல் துடித்துத் துவள்பவர்களை ஒரு பக்கத்திலே காண்கிறோம்.

இதற்கு மாற்று என்ன? இந்த இடைவெளி எப்போது நீங்கும்! இந்த இடைவெளியை நீக்காவிட்டால் மூனுவது போராகத்தான் இருக்கும்! ✻

---

## ஆதிக்க சிங்கள ஆட்சி....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைத்து வைத்துச் சித்திர வதை செய்யவும் இராணுவத்தினருக்கு ஐக்கியதேசியக்கட்சி அரசு அதிகாரம் வழங்கியிருக்கின்றது. தமிழீழத்தைஆக்கிரமிக்கப்பட்ட பூமியாக ஆயுதப்படைகளின் காலடியில் கலங்கவைக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்குத் தமிழ்பேசும் மக்கள் எவராவது வாக்களிக்க முடியாதென்பது தெளிவு.

எனவே,

1. திட்டமிட்ட முறையில் தமிழ் ஈழத்தை ஒருங்கே அபிவிருத்தி செய்ய,

2. தமிழ்பேசும் மக்கள் வேற்று மாநிலங்களில் பணயக் கைதிகளாக வாழாது தம் சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வுபெற வழிவகுக்க,

3. மாற்றார் ஊடுருவலிலிருந்து தமிழ்ப்பிரதேசத்தைக் காக்க,

4. தமிழ்பேசும் மாணவர்களுக்கு விரோதமான கல்விக் கொள்கை, தமிழ்பேசும் இளைஞர்களுக்கு விரோதமான வேலைவழங்கும் கொள்கை, தமிழ்ப் பிரதேசங்களைப் புறக்கணித்த பொருளாதார அபிவிருத்திக் கொள்கை, 'தமிழ் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பாதகமான இறக்குமதிக்கொள்கை, தமிழ்த்தேசிய இனத்தையே இராணுவத்தின் சப்பாத்துக்கால்களின் கீழ் நசுக்கும் அடக்குமுறைக் கொள்கை-ஆகிய இனவிரோதக் கொள்கைகளின் மொத்த உருவமான யூ. என். பீ. க்கு எதிராக,

5. ஏழைகளின் பங்கீட்டுணவைப் பறித்து, தாங்கமுடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவை உயரச்செய்து, சம்பள உயர்வு கேட்ட தொழிலாளர்களை வேலை நீக்கஞ் செய்து, அடக்குமுறைச் சட்டங்களினாலும், எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரின் குடியியல், அரசியல் உரிமைகளைப் பறிப்பதனாலும் மக்கள் விரோத-- ஜனநாயக விரோத யூ. என். பீ. கட்சிக்கு எதிராக,

வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களிலெல்லாம்போட்டியிடும் ஒரே கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உங்கள் வாக்குகளை வழங்குமாறு வேண்டுகிறோம்.

---

## மருந்து விலை உயர்வால் மரணம் அதிகரிக்கும்!

நோயாளிகளுக்குமிக முக்கியமான மருந்துவகைகளின் விலைகள் மீண்டும் உயர்த்தப் பட்டுள்ளன. 15 சதவீதம் தொடக்கம் 25சதவீதம் வரை மருந்துகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

ஏழை எளிய மக்களைப் பட்டினி போட்டு வதைக்கும் இந்த யு. என். பி. அரசு தற்போது மருந்து விலையையும் உயர்த்தியுள்ளதால் பாயும் படுக்கையுமாகக் கிடக்கும் நோயாளிகள் மரணத்தைத் தான் எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனப் பொதுமக்கள்கருதுகின்றனர்.

---

## சம்மாந்துறையில் அபிவிருத்திக்குச் சமாதி!

மல்வத்தைப்பகுதியில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்காக சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் 75 வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் தார்மீக அரசும் அமைச்சர்களும் முன்வந்தார்கள். கௌரவ பிரதி அமைச்சரும் சம்மாந்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களால் இந்த வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

ஆண்டுகள் இரண்டுக்குமேல் ஆகிவிட்டது. 'அமைச்சர்களால் திறந்துவைக்கப்பட்ட அத்திவாரச் சுவர்களிலே தற்போது ஆடுகளும் மாடுகளும் உராய்ந்து உராய்ந்து அத்திவாரமே ஆட்டங்கண்டு விட்டது. கடைசியாக 1 - 4 - 81 முதல் இந்த வீட்டுத்திட்டம் ஆட்சியாளர்களால் அடியோடு நிறுத்திவைக்கப்பட்டு விட்டது. இது இவ்வாறிருக்க, அரசாங்கத்தின் எடுபிடிகளும், இப்பகுதிய கங்காணிகளும் மக்களிடம் என்ன சொல்வதென்றே தெரியாத நிலையில், அரசாங்கத்திடம் பணம்இல்லை என்று கூறித் திரிகிறார்களாம்!

இப்பகுதித் தமிழ் மக்களின் நெற்காணிகளுக்கும் அரோகரா! வீட்டுத் திட்டத்துக்கும் அரோகரா!

கடைசியாக, இத்தொகுதி மந்திரியாருக்கும், அவருடைய ஆணைக்கட்சிக்கும் மக்கள் அரோகரா போடுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

---

**"உதயசூரியன்" சந்தா விபரம்**

| | |
|---|---|
| **இலங்கை** | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| **இந்தியா** | |
| ஒரு ஆண்டு | 260-00 |

(இந்தியா தவிர்ந்த) வெளிநாடுகளுக்கான சந்தா 25 அமெரிக்கன் டொலர்கள்

www.padippakam.com



# கூட்டணியின் வெற்றிக்கொடி ஏழு மாவட்டங்களிலும் உயரவேண்டும்!

**'இயக்கத்தில் உள்ள சிலர் விட்ட பிழைகளை இத்தேர்தலில் சாதிக்காது தேர்தலில் வெற்றி பெற அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இயக்கத்தில் உள்ளோர் விட்ட பிழைகளைச் சாடிப்பதற்கு இயக்கத்தில் வேறு சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் பிழைகளைச் சாடிப்பது இந்நேரத்தில் அல்ல'**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் பிரசாரம் தொடர்பாக பருத்தித்துறைத்தொகுதியில் உள்ள கூட்டணிக் கிளை உறுப்பினர்கள் மத்தியில்நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஆத்தியடியில் உள்ள இளைஞர் தேர்ச்சிச் சங்க மண்டபத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் நாம் போட்டியிட இரண்டு காரணங்கள் உண்டு.

## பருத்தித்துறைக் கூட்டத்தில் தலைவர் சிவா முழக்கம்!

முதலாவது காரணம் கடந்த 1977 ஆம் ஆண்டு கூட்டணி இயக்கத்திற்கு மக்கள் காட்டிய ஆதரவும் தலைமைப்பீடத்தில் வைத்திருந்த நம்பிக்கையும் கடந்த சில மாதங்களாகக் குறைந்து விட்டதென்று பரவலான அப்பிராயம் இருந்து வருகிறது. இந்த அபிப்பிராயத்தை முறியடிக்கும் விதத்தில் தலைமைப்பீடத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறையவில்லை என்பதையும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒரேயொரு அணி கூட்டணி என்பதையும் அரசுக்கும் ஏனையோருக்கும் எடுத்துக் காட்டும் விதத்தில் யாழ். மாவட்டம்தொடக்கம் அம்பாறை மாவட்டம் வரையில் உள்ள 6 மாவட்டங்களிலும் கூட்டணி மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தலில் வெற்றியீட்ட வேண்டும்.

இரண்டாவது காரணம் இம்மாவட்டசபைத்தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன்மூலம் தமிழினத்திற்கென ஒருசிலவற்றைச் சாதிக்கலாம் என்றே இத்தேர்தலில் போட்டியிடுகிறோம்.

இதனை நாம் போட்டியிடும் அனைத்தும் மாவட்டங்களிலும் வெற்றியீட்டினால் தான் சாதிக்கலாம். எதிரணிகள் அதிகாரத்திற்குவந்தால் எதையெதை எப்படி எப்படியெல்லாமோ அமுல் செய்யலாம். அதனால் எமக்குப் பாதிப்பு உண்டாகும். நாம் அதிகாரத்திற்கு வந்தால் அரசுடன் மோதி எமது நிலையை நிர்ணயிக்க முடியும். எனவே இத் தேர்தலில் நாம் வெற்றியீட்ட வேண்டும்.

இத்தேர்தல் மாவட்ட ரீதியாக நடைபெறுவதால் எங்கெங்கெல்லாம் எமக்குச் செல்வாக்குஉண்டோ, அங்கங்கெல்லாம் நாம் ஆதரவு திரட்ட வேண்டும். கூட்டணியைப் பொறுத்தவரை வடமராட்சிப் பகுதிக்கான வேட்பாளராக திரு. மு. தம்பிமுத்து நிறுத்தப் பட்டுள்ளார். இதனால் பருத்தித்துறை உடுப்பிட்டித் தொகுதிகளை ஒன்றிணைத்து செயல்பட இருதொகுதிக்கிளை உறுப்பினர்களையும் விரைவில் ஒன்றுகூட்டவுள்ளோம்.

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிக்காக நாம் உழைத்தது போல எம்மிடையேயுள்ள முரண்பாடுகளை 6 வாரங்களுக்கு மறந்து இத்தேர்தலிலும் வெற்றிபெற அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் கூட்டணி வேட்பாளர் பட்டியலில் வடமராட்சிப்பகுதிப் பிரதிநிதியாக 4 ஆவது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்துவை இக்கூட்டத்தில் வைத்து பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கிளை உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

---

# இளந்தளிர்களே

இது- வசந்தகாலம்!

அசைந்து அசைந்துவரும் இளங்காற்று அள்ளித்தரும் சுகத்திலேயே காலத்தின் அருமை கரும்பாக இனிக்கின்றது.

காற்று மட்டுந்தானா? கருங்குயில்களின் கானமழை காதில் தேனாகவே பாய்கிறது.

வேனில் என்றதும்- மன்மதன் வில்லேந்தி விடுவானாம்- புஸ்பபாணம் பறக்குமாம் - புராணிகர்கள் சொல்கிறார்கள்!

பழைய இலை ஆடையைக் களைந்து- புதிய தளிராடை பூண்ட மரம் செடி கொடிகளெல்லாம் பூக்களாகச் சிரித்து வண்டுகளுக்குப் போதை ஊட்டுகின்றன.

'செக்ஸ்' துளிகள் இங்கேயும் சிந்தப்படுகின்றன;

எங்கு நோக்கினும் இளமை... இளமை... ஊஞ்சலாடுகின்றது.

இதமான இந்தச் சூழ்நிலையை நோக்கும்போது- மனித வாழ்க்கைச் செடியின் இளந்தளிர்களாம்- இளஞ்சமுதாயமே மனத்தில் சுகந்தத்தைப் பரப்புகின்றது!

இளந்தளிர்கள்...

மங்கை ஒருத்தியைப்பாருங்கள்- மலர் குலுங்கும் சோலையாகவே காட்சியளிக்கின்றாள்!

வான் புகழ் வள்ளுவன் இந்த வனப்பைக் கண்டுதான்-

அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ கனங்குழை
மாதர் கொல் மாலும் என் நெஞ்சே.

என்று- இதயம் மயங்கிப் பாடியிருக்க வேண்டும்!

குமரியின் அழகுக்கு குமரன் அழகு குறைந்ததா என்ன? அவன் ஒரு குன்றமாகவே தோன்றுகிறான்.

இவர்கள் இருவரையும் இணைத்துப் பார்க்கும் போது- குன்றமும் அதில் பூத்த குறிஞ்சி மலராகவும் குளு குளுவென்று......

கோதை அவள் குணத்தில் குளிர்ந்த நிழல் எனில்- அவன் கோடை காலத்து வெயிலாகவே கொதிப்பான்!

அன்ன நடை பழகும் ஆறு எனில் அவள்- அவனோ ஆர்த்து எழும் கடல்!

ஊற்றெடுக்கும் கிணற்று நீர் எனில் அவள்- அவனோ ஓடிப்பாயும் காட்டாற்று வெள்ளம்!

சில சமயம் இந்தத்தன்மைகள் இடம் மாறி இருப்பதும் உண்டு!

புயலாக அவள் சீறும்போது- அவன் பூந் தென்றலாக தழுவுவதும் உண்டு!

இளமையின் கோலங்கள் இவை!

எழுச்சி- புரட்சி- மலர்ச்சி- புதுமை எல்லாம் இளமையின் சாகஸங்கள்- சாதனைகள்!

ஆவதும் இளமையாலே; அழிவதும் இளமையாலே- இது புதுமொழி- சரியான மொழியும்கூட!

உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என்கிறார்கள். இதில் எனக்கு உடன்பாடில்லை!

உயிர் கொடுப்பது இளமை- உடல்கொடுப்பதும் இளமை- இதுதான் உண்மை!

உலக நாடுகளின் வரலாற்றேடுகளையெல்லாம் புரட்டுங்கள்- இந்த உண்மையின் விஸ்வரூபத்தைக் காணலாம்.

இளமையை- அதன் அளப்பரிய ஆற்றலை எவர்தான் வியந்து போற்றவில்லை?

காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

என்று மகாகவி பாரதியைப் பாடச் செய்தது எது?

இளமை... இளமை... இளமையின் முறுக்கு!

பாரதிக்கு- அவர் தாசனாக விளங்கிய பாரதிதாசனும் இதில் குறைந்தவரல்ல- அவர் பாடுகின்றார்-

கன்னியின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்.

இத்தகு ஆற்றல் மிகக இளந்தளிர்களே! நம்புங்கள்- நீங்கள் இல்லையேல் இவ்வுலகமே இல்லை!

சர்வவல்லமையுள்ள சர்வேசுரன்களே, நீங்கள் தான். உங்கள் சக்தியின் முன்னால் இந்த உலகம் ஒரு சிறு துரும்பு- உணருங்கள்!

சமீபத்தில நடைபெற்ற ஒரு சரித்திர நிகழ்ச்சியை இதற்காக உங்கள் முன் வைக்கின்றேன்!

வடஅயர்லாந்து நாட்டின் வாலிபன் அவன்- பெயர் பொபி சாண்ட்ஸ்- வயதோ 26தான்! அயர்லாந்து நாட்டின் விடுதலைக்காக ஆர்த்தெழுந்த அவனை பிரிட்டிஸ் அரசு சிறைபபிடிதது காவலல் வைத்தது- அவனோடு இன்னும் சில அடலேறுகள்!

சிறையில இருக்கும் போதே பிரிட்டிஸ் பாராளுமன்ற உறுபபினன் எனும சிறப்புமிகு பதவி அவனைத் தேடிவநதது- 30 ஆயிரம் அதிக வாககுகளால் மககள் மன்றம் இந்த முதன்மையை அவனுககுப் பெற்றுக்கொடுததது!

இதேவேளை-

அயர்லாந்தின் விடுதலைக்காகப் போராடி சிறையில் வாழும் அனைத்து கெரில்லா வீரர்களையும சாதாரண கிரிமினல் குறறவாளிகளைப் போலன்றி- அரசியல் கைதுகளாக நடத்த வேணடுமென்ற கோரிககையை முனவைதது சிறையிலேயே பொபி சாணடஸ் உண்ணாவிரதப் போராடடத்தைத் தொடங்கினான்.

அரசு அவனது கோரிக்கைக்கு அடிபணிய மறுத்தது.

அவன் அயரவில்லை!

போராட்டம் சிறைக்குள் புயலாகவே வீசிக்கொண்டிருந்தது.

அறுபத்தாறு நாட்களாக நடந்த இந்தத் தர்மயுத்தத்தில் அவனது உயிா பறிக்கப்பட்டே விட்டது.

ஆம்! இலட்சியத்திற்காகவே தன்னை இழந்த இளந்தளிர் அவன்!

உதிர்ந்து போன இந்த இளந்தளிரைககண்டு, ஒருகாலம் உலகாண்ட பிரிட்டிஸ் அரசு நடுநடுங்குகிறது- படைகளைத் திரட்டித் தன் பக்கத்தில் வைத்திருக்கிறது!

இளந்தளிர்களே! இதுதான் உங்கள் ஆற்றல்- இதுதான் உங்கள் மகா வலிமை- இதுதான் நீங்கள்!

**கவிஞர் வாகரைவாணன்**

---

## மலையக மக்களின் மனம் குளிரும் செய்தி!

திருவாளர்கள் க. நா. பத்மநாதன், அ. அ. சிங்..ாயர் ஆகிய இரு நகராண்மைக்கழக உறுப்பினர்களும் தங்கள்உறுப்பினர் பதவிகளைத் துறந்து மலையகத்து மக்களின் சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட இளைஞன்- வைத்திலிங்கம் பாலச்சந்திரனுக்கும், அடுத்த வேட்பாளரான சின்னத்தம்பி சிவானந்தனுக்கும் நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராகச் சேவை புரிவதற்கு இடமளித்துள்ளனா.

வவுனியா நகராண்மைக் கழகத்தில் தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன்உட்பட பதினொரு உறுப்பினர்களில் எண்மர் 1979-ம்ஆண்டுவைகாசிமாதம் 19-ந் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றியீட்டிச் சேவை செய்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## அரசு வழங்கும் பவுண் அனுமதியைப் பெறுவதில்லை

அரசாங்கம்வழங்கும் பவுண் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதில்லை என்று யாழ் ஆபரணத் தொழிளாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இச்சங்கத்தின் 5வது வருடாந்தக்கூட்டம் தலைவர். திரு. மு. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்றபோது ஏகமனதாக தீர்மானித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



# இராசதுரை - தேவநாயகம் தமிழ்மக்களுக்கு இதுவரை செய்ததென்ன?

## பண்டிதர் வினு எழுப்புகிருர்!

சிங்கள சிறிலங்காவின் ஐ.தே. கட்சியை, அடிமைப்பட்டிருக்கும் தமிழ் ஈழ மக்கள் ஆதரித்தால் பல நன்மைகள் கிடைக்கும் என்று பலவாறு அர்த்தமற்ற நகைப்புக்கிடமான பிரசாரம் செய்யப்படுகிறது. வேலைவாய்ப்பு, அபிவிருத்திவேலைகள், நாட்டுவருமானம் முதலியவற்றிலே தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கைக்கூட ஐ.தே. கட்சி அரசாங்கம் தரவில்லை என்பதைப் பல உதாரணங்கள் காட்டி உதயசூரியன் நிருபித்துள்ளது.

சிங்களச் சிறிலங்கா அரசாங்கத்தில் தமிழ் ஈழத்தைச் சேர்ந்த இருவர் திரு. தேவநாயகமும், திரு. இராசதுரையும் அமைச்சர்களாகவிருக்கின்றனர். இந்த அமைச்சர்கள் கூட தாங்கள் செய்வதாகக் கூறிய-- செய்யவேண்டிய பணிகளைச் செய்ய முடியவில்லை. இதனை இப்பொழுது அவர்களுக்குப் பகிரங்கச் சவால் விடுவதன் மூலம் தமிழ் மக்கள் மனத்திலே பசுமரத்தாணி போலப் பதியச்செய்யவேண்டியுள்ளது. அமைச்சர்களால் செய்ய முடியாததை மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுக்காக ஆரவாரஞ் செய்யும் ஐ. தே. கட்சி வேட்பாளர்



களால் செய்யமுடியுமா? என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு-- காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் விடுத்த அறிக்கையில் வினு எழுப்பியுள்ளார். அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

அமைச்சர் திரு. தேவநாயகம் அவர்கள் கிராம சேவையாளர் போன்று தமிழ்ப் பகுதிகளிலே மட்டும் பணியாற்றும் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லாமல் செய்யப்படும் என்று பாராளுமன்றத்தில் எனக்குக் கூறினுர், ஆனுல், அவரும் சேர்ந்து உருவாக்கிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 182 தமிழ் பேசும் மாவட்டங்களிலே மட்டும் கடமையாற்றும் கிராமசேவையாளர் போன்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்களத் தேர்ச்சி கட்டாயம் தேவை என விதித்திருக்கிறது. எனவே, திரு. தேவநாயகம் தாம் பாராளுமன்றத்தில் கூறி நிறைவேற்ற உடனடி நடவடிக்கை எடுப்பாரா?

அமைச்சர் திரு. இராசதுரை தமிழ்மொழிச் சட்ட அமுலாக்கலுக்கும் பொறுப்பாயிருக்கிருர், என்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரசாரஞ் செய்யப்படுகின்றது. அரசியலமைப்பிலே இடம்பெற்றுள்ள தமிழ்மொழிஉரிமைகளை நடைமுறைப்படுத்த இன்றுவரை அவர் தமிழ்மக்களுக்குப் பயன் தரும் எந்தநடவடிக்கையையும் எடுக்கவில்லை. பாராளுமன்றத்திலே விரைவிலே தமிழ் மொழிச் சட்டம் அமுலாக்குதல் குறித்து வழிகாட்டுரைகளைக் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்படும்என எனக்குத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. பலமாதங்களாகியும் இன்னும் அந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை. இந்த மாதம் முடியுமுன் அந்தச் சுற்றிக்கையை அவர்வெளியிடுவாரா?

தமிழ்த் தட்டச்சாளருக்கும், சுருக்கெழுத்தாளருக்கும் பயிற்சி வகுப்பை விரைவில் தொடங்குவதற்கும், அவருடைய அமைச்சும் கவனம் எடுக்கும்எனப் பாராளுமன்றத்திலே எனக்குக் கூறப்பட்டது. பலமாதங்களாகியும் இன்னும் பயிற்சி வகுப்புக்கள் தொடங்கப்படவில்லை. இந்த மாதம் முடியுமுன் வகுப்புக்களைத் தொடங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

# விடுதலைவீரர் பொபிசாண்ட்ஸ் மரணம் விசனிக்கத்தக்கது!

## யாழ். மாநகர முதல்வர் செய்தி!

''வட்அயர்லாந்தின் விடுதலைக்காகப் போராடி வரும் அயர்லாந்துக் குடியரசு கைதிகள் அனைவரையும் அரசியல் கைதிகளாக பிரித்தானிய அரசாங்கம் கணிக்கவேண்டும் என்றகோரிக்கை மீது, 27 வயது இளைஞரான பொபி சான்ட்ஸ் அறுபத்தாறு தினங்களாகத் தாம் நடத்திவந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் மரணமடைய அனுமதிக்கப்பட்டது பெரிதும் விசனிக்கத்தக்கது.

இவ்வாறு விடுதலைவீரர் பொபி சாண்டஸ் மரணம் குறித்து யாழ்- முதல்வர் விடுத்த செய்தியில் கூறியுள்ளார். அவர் மேலும் தமது செய்தியில் கூறியதாவது:

பொபி சான்டசின் மரணத்தைத் தவிர்ப்பதற்காக ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும், பாப்பரசரின் பிரதிநிதியும் மேற்கொண்ட சமரசமுயற்சிகளைபிரித்தானிய அரசு செவியேற்கத் தவறியமையும் துர்ப்பாக்கியமானதே.

''தமது தாயகத்தை, தந்தையர் நாட்டை விடுவிப்பதற்கு சாத்வீக வழிமுறைகள் சரிப்பட்டு வராவென்ற உள்ளுணர்வால் இறுதி நடவடிக்கையாக ஆயுதம் எடுத்துப் போராடிவரும் விடுதலை வீரர்களை முதலாளித்துவ -காலனி நாடுகள் பயங்கரவாதிகளாகச் சோடித்துக் காட்ட முயன்றுலும் உலகம் அதை ஒப்புக்கொள்ளாது. விடுதலை வீரர்களுக்கு உரிய மதிப்பும் கௌரவமுமே அவர்களுக்கு வரலாற்றில் ஒதுக்கப்படும். கூட்டுச்சேரா நாடுகள் அணியும் விடுதலைக்குப் போராடி வரும் ஒரு தேசியஇனம் இறுதி நடவடிக்கையாக ஆயுதம் எடுத்துப் போராடுவது பயங்கரவாதமல்ல என்றே முடிவு செய்துள்ளது. அதே அணியைச் சேர்ந்த ஸ்ரீலங்காஅரசு பொபி சான்டசின் மரணம் குறித்து பிரித்தானிய அரசின் மனப்பான்மையைக் கண்டிக்கத் தவறியமை கண்டிக்கப்படத்தக்கது.

## சாதியின் பெயரால் வீதியா?

சாதியின் பெயரால் அழைக்கப்படுகின்ற வட்டாரங்கள், குறிச்சிகள், வீதிகள், குளங்கள் போன்றவற்றின் பெயர்களை மாற்றவேண்டுமெனக் கோரி அறவழிப் போராட்டக்குழு தமிழ்பகுதிகளிலுள் உள்ளூராட்சி மன்றத்தலைவர்களுக்கு மகஜர் அனுப்பியுளது.

இது விடயமாக அண்மையில் யாழ் மாநகரசபை ஒரு நல்ல தீர்மானத்தை எடுத்து ஏனைய நகராளுமன்றங்களுக்கு முன் மாதிரியாக காட்டியுளது.

# இனத் துரோகிகள் கூடாரமாக....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதேயாகும்'' என தேர்தல் பிரகடனத்தை வெளியிட்டனர்.

அதன்படி 1977 தேர்தலில் நாம் அனைவரும் ஒரேமுகமாக நின்று வாக்களித்தோம். முடிவு என்ன? இத்தீவின் சரித்திரத்தில் என்றும் நடக்காத நிகழ்ச்சி நடந்தது. எமது அணி ஸ்ரீலங்காப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகியது. எம் நெஞ்சம் நிறைந்த தலைவர் அமிர் எதிர்க்கட்சித் தலைவரானுர். அதைக்கூட பொறுக்காத அரசினர் விகிதாசார தேர்தல் என ஒரு புதுமுறையைக் கொண்டுவந்துள்ளனர். நாம் எதிர்க்கட்சித்தலைமையைக் கைப்பற்றியதினுல் அடைந்த நன்மைகள் அநேகம். முன்னுளில் ஸ்ரீலங்காப் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிஇரண்டுமே சிங்களக் கட்சிகளே. அதனுல் நமது நிலை உலகின் கண்களுக்குத் தெரியவில்லை. இன்று எமது நிலை உலகஅரங்கிலே வெகுவேகமாகப் பரவியுள்ளது. ஸ்ரீலங்காவிற்கு வரும் எந்த வெளிநாட்டவனும் எமது தலைவரை--எதிர்க்கட்சித்தலைவரை கட்டாயமாகச் சந்திக்கிருன். அப்போது அரசியல் அனுபவத்துக்கு மறுபெயராக விளங்கும் எமது தலைவர் நமது நிலையை அக்குவேறு ஆணிவேருகப் பகுத்து அவர்களுக்கு விளக்கி அனுப்புகிருர்.

### பார்வையாளர் அல்ல, பங்காளர்கள்!

நமக்கு இன்று ஒரே காவல் அரண் கூட்டணி. ஒரே விடுதலை இயக்கம் கூட்டணி. நாம் இழந்த குடியுரிமை, மொழியுரிமை, மதவுரிமை, தொழிலுரிமை, உயர் கல்வியுரிமை, நாட்டுரிமை அனைத்தையும் பெற்றிடவேண்டும் என்ற கொள்கை வைரம் குன்ருக் குணசீலர்களின் கூடாரம் கூட்டணி. அந்த அணி மாத்திரம் எம் விடுதலையைப் பெற்றிட முடியுமா? எம்முன்னே வைத்த தமிழீழம் பெறும் குறிக்கோளை நோக்கி நாம் இதுவரை செய்தது என்ன?

நமது வாழ்வில் தேவையான அடிப்படைக் கருத்துக்களில் போதுமான தெளிவு இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் அக்கருத்துக்களைச் செயற்படுத்த முடியும். உலகில் நாம் எண்ணியது எண்ணியவாறு நடக்கும் — நாம் திண்ணியராகப் பெற்ருல். எனவே நாம் அனைவரும் முதலில் திண்ணியராகப் பெறுவோம். கூட்டணியில் பார்வையாளராய் இருக்காமல் பங்காளராய் மாறுவோம்.

இன்று நம்மிடையே அநேக அமைப்புகள் தலைதூக்குகின்றன. ஆனுல் எந்த அமைப்புக்கும் தேவையான அம்சங்கள் இல்லை — த. வி. கூட்டணியைத் தவிர! எமது அணியில் தரமான கொள்கை - தனித்துவமான இயக்கம் - தரணி புகழ் தலைமை இருக்கிறது. இவை மூன்றும் ஒன்ருக இல்லாத அமைப்பு உருப்படாது.

ஓர் அமைப்பிற்குத் தலைமை தான் மூளை - கொள்கை தான் உயிர் - இயக்கம்தான் உடல்.

அந்தவகையில் எமது அணியை எண்ணி நாம் பெருமைப் படவேண்டும்.

விடுதலையை நாடி நிற்கும் நாம் இதுகாலும் செய்தது 1977 பொதுத்தேர்தலில் வாக்களித்தது மட்டுமே. இது விடுதலைக் களத்தில் ஒரு சிறு பாகமே. விடுதலையை நாடி நிற்கும் நாம் தேர்தல்களில் ஈடுபடலாமா? ஆம், ஈடுபடலாம். இல்லையெனில் இலட்சியம் இல்லாதவர்கள் - காட்டிக் கொடுப்பவர்கள் - கழுத்தறுப்பவர்கள் எல்லாம் தேர்தலில் நின்று வெற்றிபெற்று நமது பிரதிநிதிகள் என மாற்ருரால் அழைக்கப்படுவார்கள். அத்துடன் ஸ்ரீலங்காவினர் எதைச் செய்தாலும் ஆமாம்சாமி போட்டு எமது இனத்தின் புகழை ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிடுவார்கள். எனவே நமக்கு எனக் கிடைக்கின்ற எந்த இடத்தையும் நாமாக இழந்து பழிச்சொல்லுக்கு ஆளாகக்கூடாது.

எங்களிடம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
சகலவிதமான பலசரக்குச் சாமான்களும்,
சாப்புச் சாமான்களும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. மாணிக்கம் அன் பிரதர்ஸ்
நம். 12, கச்சேரி வீதி,
கொழும்பு - 11.

எங்களிடம்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களும்,
சாப்புச் சாமான்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

* இன்றே விஜயம் செய்யுங்கள் *

ரி. எம். பி. அன் கோ.,
நம். 1, கச்சேரி வீதி,
கொழும்பு - 11,

இப்பத்திரிகை 'உதயசூரியன்' வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினரால் 1981-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்